கற்பகம்
KATPAKAM
திங்கள் இதழ்

## குறளமுதம்–7

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

அதிகாரம்–1 அறத்துப்பால் –கடவுள் வாழ்த்து

"தனக்கு உவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு–அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

*தனக்கு நிகர் இல்லாத இறைவனின் அடிகளை இடைவிடாமல் நினைப்பவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு மனக்கவலை நீக்குதல் இயலாது.*

மலர்–01 மே–2008 இதழ்–07

### அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும்

# முதலாவது கூட்டுறவு நிறுவனம் ப.தெ.வ.அ.கூ.சங்க சமாசமே!

-கூட்டுறவு ஆணையாளர்-

**"வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு அவர்கள் தங்கள் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் காலத்தில் அவர்களுடைய வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏனைய மாகாணங்களில் நடைமுறையில் இல்லாத ஓய்வூதிய திட்டத்தை எந்தவொரு சட்ட ஆக்கத்திற்கும் அமைவாக இல்லாமல் எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி முதன் முறையாக இங்கு நடைமுறைப்படுத்துகிறோம். இத்திட்டம் இடைநடுவில் நின்றுவிடாது தொடர்ந்து நடைபெற வேண்டுமென வும் அதற்குரிய உதவிகளை கூட்டுறவு திணைக்களம் வழங்கும்" என்று வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆ.சுப்பிரமணியசர்மா தெரிவித்தார்.**



வடமாகாண ப.தெ.வ.அ.கூ. ச.சமாசத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைத்தும் அங்கத்தவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்துப் பேசும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

சமாசத் தலைவர் சி.சந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது,

தமது வாழ்வாதார தொழிலிலிருந்து 74 வயதில் ஓய்வுபெற்றுச் சென்றாலும் அவர்களிடம் தொடர்ந்தும் தொழில் செய்யக் கூடிய வலுவும் ஆற்றலும் இருப்பதை கேள்விப்பட்டு மகிழ்ச்சி அடைகிறேன். சமாசம் தற்போது வழங்கி வரும் விபத்து நிதி ஓய்வுபெற்ற அங்கத்தவர்களுக்கு இல்லை என்று அறிகிறேன். ஆனால் அவர்கள் ஓய்வுபெற்றுச் சென்றபின்பும் தொழில் செய்வார்களானால் அதனை அவர்களுக்கு வழங்குவதற்கும் சமாசம் நட்வடிக்கை எடுக்க வேண்டும்.

(8ம் பக்கம் பார்க்க)

# அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் சமாசம் பாராட்டுக்குரியது!

-யாழ்.அரச அதிபர் புகழாரம்-




**இலங்கையின் கூட்டுறவு வரலாற்றில் யாழ்.மாவட்டம் முன்னணியில் திகழ்ந்து வருகிறது. ப.நோ.கூ.சங்கங்கள். ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் ஒவ்வொன்றும் தங்கள் தங்கள் அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவையை ஆற்றி வருகின்றன என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயம். இந்நிலையில் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அபிவிருத்தி வேலைகளுக்கென நிதியை ஒதுக்கி வருகிறது. துறைசார்ந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து அவர்களை வளர்த்தெடுக்கும் முயற்சிகளை நாம் மேற்கொண்டுள்ளோம். மிகவும் கஷ்டமான தொழிலை மேற்கொண்டு வரும் அங்கத்தவர்களுக்கு சமாசம் ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்தி வருவது பாராட்டுக்குரியதாகும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.**

வடமாகாண ப.தெ.வ.அ.கூ. ச.சமாசத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைத்தும் அங்கத்தவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தும் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாசத் தலைவர் சி.சந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது, (8ம் பக்கம் பார்க்க)

### சிந்தனைத்துளி

"நம் வாழ்வில் கிடைக்க முடியாத பெருஞ்செல்வம் நாம் வீணே கழிக்கும் ஒவ்வொரு விநாடியும்தான்"

-யாரோ-

## கற்பகக்கரு

### வாக்குறுதிகள்!

கூட்டுறவு அமைப்பில் முற்றிலும் மாறுபட்ட நிறுவனமாக செயற்பட்டுவருவது பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களாகும். இந்நிறுவனங்கள் அங்கத்தவரது கடின உழைப்பில் இருந்து பெறப்படும் நிதியை மூலதனமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. உண்மையில் தனது அங்கத்தவர்களின் அடிப்படை வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்வதே இவற்றின் முக்கிய குறிக்கோளாகும்.

அங்கத்தவர்களின் நுகர்ச்சித் தேவைகளை பூர்த்தி செய்வதில் ப.நோ.கூ.சங்கங்கள் செயற்பட்டு வருவதைப்போல் ப.தெ.வ.அ.கூ.நிறுவனங்கள் தங்களது அங்கத்தவர்களதும் அங்கத்தவர்களது பிள்ளைகளினதும் அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் திட்டங்களை தயாரித்து அத்திட்டங்களின் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர். ப.நோ.கூ.சங்கங்களுக்கு உரிய நிதி வசதிகள் வங்கி மூலமாக கடன் அடிப்படையில் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கி வருவதைப்போல் இந்நிறுவனங்களுக்கு எவ்விதமான கடன் வசதிகளும் கிடைப்பதில்லை.

உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு (பனை தென்னை வளங்கள்) உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை இனங்கண்டு அவற்றுக்கான சாத்தியக்கூற்று அறிக்கை தயாரித்து அவற்றை உரியவர்களிடம் ஒப்படைத்து அவர்கள் மூலம் கிடைக்கக்கூடிய அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை பெற்றுக்கொள்வதில் கூடிய சிரத்தை எடுக்க வேண்டும். 'அது செய்ய வேண்டும்', 'இது செய்ய வேண்டும்' என்று பேச்சளவிலும் எழுத்து வடிவத்திலும் மட்டும் நின்றுவிடாது, அவற்றுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு சிறந்த நிர்வாகிகளும் முகாமைமட்ட பணியாளர்களும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். இவ்வாறு ஒருங்கிணைந்து செயற்படும் பட்சத்தில் எந்த இலக்கினை அடைவதற்காக இந்நிறுவனங்கள் உருவாக்கப்பட்டதோ அந்த இலக்கினை அடைவதற்கு வழி வகுக்கும்.

எந்தவொரு திட்டத்தினையும் நிறுவன ரீதியாக முன்னெடுக்கும்போது அத்திட்டத்தை உள்ளடக்கிய சகலவிதமான விபரங்களும் பூரணமாக வெளிப்படுத்தப்பட வேண்டும். நடைமுறையில் சாத்தியப்படக்கூடிய நுண்கருத்திட்டங்கள், திட்டத்திற்குரிய பயனாளிகளின் அடிப்படை வாழ்வாதார, பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தக் கூடியனவாக அமைந்திருந்தால் அதற்குரிய அங்கீகாரங்களும் நிதி வசதிகளும் உரியவர்களினால் வழங்கப்படும். இதனையே யாழ் அரச அதிபரும், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் தெட்டத் தெளிவாக கூறியுள்ளனர்.

இந்நிலையில் இங்கு அவர்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை இந்நிறுவனங்கள் நிதர்சனமாக காணவேண்டுமானால் அவர்கள் கூறிய வழியில் ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் செல்ல வேண்டும்.

எனவே காலம் தாமதியாது இந்நிறுவனங்கள் தத்தமக்கு பொருத்தமான உற்பத்தி வசதிகளை மேற்கொள்வதற்குரிய வழிவகைகளை கண்டறிந்து அவற்றுக்குரிய சாத்தியக்கூற்று அறிக்கைகளை சம்பந்தப்பட்டவர்களிடம் கையளிக்க வேண்டும் என கற்பகம் வற்புறுத்துகிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

# சூழல் பாதுகாப்புக்கும் மழைவீழ்ச்சி அதிகரிப்புக்கும் பனைவளம் உதவும்!

பனைவளம் வற்றா இயற்கைச் செல்வமாக திட்டமிட்டுப் பயிராக்கப்பட்ட ஒரு பயிரன்றித் தானாகவே வளர்ந்த ஒரு காட்டுப் பயிராகவே மக்களுக்கு அறிமுகமாகியுள்ளது.

பண்டைக் காலத்தில் மனித வாழ்வுடன் இயைந்து வாழ்ந்த தாவரமாக மனித வர்க்கத்திற்கு பலன் தரக்கூடிய ஒன்றென்பதை மக்கள் உணர்ந்து கொண்ட போதும் அத்தகைய பலனை உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்கோ அல்லது அதனை அதிகப்படுத்திக்கொள்வதற்கோ அவர்கள் அதன்மீது கவனம் செலுத்தாதது தற்கால நிலையாகும். மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் இடப்படுத்தப்பட்ட பயிராக பனை வளம் இருந்தபோதும் பனை இன்னமும் ஒழுங்கான முறையில் பயிரிடப்படாத காட்டுப் பயிராகவே நீடித்து வருகின்றது. ஏனைய பயிர்களைப்போல் பனந் தோட்டங்களின்றி தோப்புக்களே காணப்படுகின்றன. அத்துடன் பனை மரங்களின் அடர்த்தியும் ஒரே சீரானதாயில்லை. சில இடங்களில் அதிகளவு நெருக்கமாகவும் மற்றும் சில இடங்களில் நெருக்கம் குறைந்ததாகவும் காணப்படுகின்றது.

பனை மரத்தை தானே இயற்கையாக அபிவிருத்தியடைய விடப்பட்ட இடங்களும் உண்டு. ஆங்காங்கே நெருக்கமாகவுள்ள கூடங்களில் விழுந்த பழங்கள் மரத்தடியிலேயே முளைத்து வடலியாகி வளர இடமின்றிப் பற்றையாக மாறியுள்ளதும் உண்டு. இவ்வகையான நிலைப்பாடுகளின் வெளிப்பாடுகள்தான் பனை மரங்கள் எதுவிதமான கவனமும் இன்றித் தாறு மாறாகத் தறிக்கப்படுவதுகூட அவை கூட்டு மரங்களின் நிலையில் வைத்து நோக்கப்படுவதன் வெளிப்பாடேயாகும். அத்துடன் பனந்தொழிலின் வழி பெறப்படும் பயன்கள் பொருளாதார முக்கியத்துவமுடையதாக கொள்ளப்படாது அதன் சந்தர்ப்பச் செலவு கூடியதாக கருதி அவற்றை மரத் தேவைக்காக தறித்தல் அதிக இலாபமுடைய தொன்றாக கருதியும் பனை வளரும் நிலங்களை வீடு கட்டவோ வேறு பணப்பயிர் செய்யவோ பயன்படுத்துவது கூடியளவான பயனுடையதாக இருப்பதாக மக்கள் கருதியதும் ஆகும்.

அத்துடன் படிப்படியாக இடம்பெற்றுவரும் சனத்தொகை அதிகரிப்பும் வீடு, கட்டட நிர்மாணம் என்பவற்றுக்கு அதிகரித்துச் செல்லும் கேள்வியும் பனைவளரும் பிரதேசங்களான வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் உள்நாட்டு யுத்தம் காரணமாகவும் இலட்சக்கணக்கான பனை மரங்கள் கண்டபடி வெட்டப்படுவது தனியாக ஒரு பிரச்சினையாக நோக்கப்பட்டு அதனை எதிர்கொள்வதற்கு செயற்கை முறையிலான சட்ட வடிவிலான ஆதரவும் கோரப்பட்டபோதும் அழிவு நிலை தொடர்ந்தே வந்துள்ளது.

பனைத் தொழிலின் பொருளாதார ரீதியிலான தரம் உயர்வடையுமானால் பனை அழிப்பு பிரச்சினை தானாகவே நீங்கிவிடும். அதாவது பனம் பொருள் உற்பத்திகளின் பொருளாதார நலன்களை மக்கள் நடைமுறையில் அனுபவிப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும். அதன் மூலம் பனை ஒரு காட்டுத் தாவரம் என்ற நிலை நீங்கிப் போய்விடும். இந்த வகையில் பனைகளின் திட்டமிடப்படாத அழிவைச் சட்டங்களின் மூலம் தடுப்பது மாத்திரமின்றி திட்டமிட்டு பனையை வளர்க்க முயலவும் வேண்டும்.

நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்படும் பனை வளர்ப்பு திட்டங்கள் மக்களை முழு நிலையில் பனைத் தொழிலில் ஈடுபடும் கூடியளவு மாற்றம் பெறும்வரை ஈடுபட வேண்டும். அத்தோடு வடக்கு கிழக்கு மாகாணத்தின் சூழல் பாதுகாப்புக்கும் மழை வீழ்ச்சிக்கும் பனை வளர்க்க வேண்டிய தேவையினை மக்கள் அறிந்து கொள்வதும் பிரதான தேவையாகவுள்ளது.

இப்பிரதேசத்தில் பனை வளரக்கூடிய சுமார் ஐந்து இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பனையை வளர்த்தால் சூழல் பாதுகாக்கப்படுவதுடன் மழைவீழ்ச்சியும் அதிகரிக்கும். அழிந்துபோகும் நிலையில் உள்ள பனை வளத்தினை பாதுகாப்பதுடன் பனையின் எண்ணிக்கை பெருகும்போது பனைத் தொழிலும் பனை வளமும் நிலப்பயன்பாடும் அதிகரிக்கும். பனைவளம் சார்ந்த நிறுவனங்கள் அதனை அபிவிருத்தி செய்வதற்கு அயராது பாடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

*நன்றி, பனைச்செல்வம்.*

## அங்கத்தவர் விபத்து ஓய்வூதிய நலத்திட்ட நடைமுறை விதி

**முற்றொடர்----**

9.2 இதற்கெனவுள்ள விபத்து அறிக்கையை பூர்த்தியாக்கி சம்பந்தப்பட்ட கிளைக்குழுத் தலைவர், செயலாளர் ஆகியோரின் கையொப்பங்களுடன் வேண்டிய ஆவணங்களுடனும் விபத்து உபசபையின் சிபார்சுடனோ நேரடியாகவோ அடுத்துவரும் சங்க நெறியாளர் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு பொது முகாமையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9.3 குறுங்கால விபத்துக் கொடுப்பனவு இத்திட்டம் அமுலாக்கம் மூலம் நீக்கப்படுகிறது.

9.4 தொழில் புரியும்போது ஏற்படும் நேரடி விபத்து சகல விபத்து அறிக்கைகளையும் சமாச நெறியாளர் குழுநேரடியாகக் கையாளும் பொறுப்பு உடையதாதலால் அவற்றை உரிய ஆவணங்களுடன் சங்க நெறியாளர் சபையின் பரிந்துரையுடன் சமாசத்திற்கு விரைவில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

9.5 ஓய்வூதியர் கோரிக்கை சம்பந்தமான விண்ணப்பங்களுக்கும் இதே நடைமுறையை சங்கம் கைக்கொள்ள வேண்டும்.

9.6 சங்கத்திற்கு விபத்து அறிக்கை மற்றும் ஓய்வூதிய விண்ணப்பம் கிடைக்கப் பெற்று இருவார காலத்துள் மேற்கொள்ள சமாசத்திற்கு அனுப்பி வைக்க நெறியாளர் குழு பொறுப்புடையதாகும்.

### 10. சமாச மட்ட ஏற்பாடுகளும் பொறுப்புக்களும்:-

10.1 சமாசத்திற்கு கிடைக்கப் பெற்ற அனைத்து விபத்து அறிக்கைகளும் ஓய்வூதிய விண்ணப்பங்களும் சமாச விபத்து உபசபையின் சிபார்சுடன் சமாச நெறியாளர் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

10.2 பாதிப்பின் தன்மைக்கு ஏற்பவும் வகைப்படுத்தப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளுக்கு அமையவும் நிதியை தீர்மானிக்கும் பொறுப்பு சமாசம் நெறியாளர் குழு கொண்டிருக்கும்.

10.3 சமாசத்தால் பார்வையிடப்பட வேண்டிய விபத்துக்களை உடனுக்குடன் பார்வையிடுவதிலும் கால தாமதமின்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு விபத்து நிதி ஓய்வூதியம் என்பன சென்றடைவதற்கு சமாச நெறியாளர் குழு துரிதமுடன் செயலாற்ற வேண்டும்.

### 10.4 விபத்து அறிக்கைகள் ஓய்வூதிய அறிக்கைகள்:-

சமாசத்திற்கு வந்தடைந்த திகதியில் இருந்து குறைந்த பட்சம் இருவார காலத்திற்குள் அதற்கான நிதி தீர்மானிக்கப்படுவதற்கும் நிதி தீர்மானிக்கப்பட்டதில் இரந்து ஒரு மாத காலத்துள்ளும் சங்கங்களுக்கு நிதி கிடைக்கப்பெறுவதை கருத்தில் கொண்டு சமாச நெறியாளர் குழு நடவடிக்கைகளை கையாள வேண்டும்.

### 11. விபத்து கொடுப்பனவுகள்

11.1 சமாச நெறியாளர் குழுவினால் தீர்மானிக்கப்படும் அனைத்து விபத்துகடகான கொடுப்பனவுகளும் கூ.அ.உ.ஆணையாளரின் அனுமதி பெறப்பட்ட பின்னரே சங்கங்களுக்கு அளிக்கப்படும்.

11.2 விபத்து மரணத்திற்கு ரூபா 10,000 (பத்தாயிரம்) உடனுதவும் வகையில் முற்பணமாக சங்கம் வழங்குதல் வேண்டும்.

11.3 அங்கத்தவர் ஒருவர் இத்திட்டத்தின் கீழ் இணைந்து ஆறு மாதங்கள் பூர்த்தியாகிய பின்னரே இத்திட்டத்தின் நலன்களைப் பெறத் தகுதி உடையவர்.

11.4 சங்கங்களினால் அனுப்பப்படும் விபத்து அறிக்கை ஏதேனும் இத்திட்ட நடைமுறைகளுக்கு அமையாதவிடத்து அத்தகைய வற்றினை நிராகரிக்கவோ வேண்டியவிடத்து சமாச பொதுச்சபை யின் தீர்மானத்திற்கு பதிந்துரை செய்யவோ சமாச நெறியாளர் குழு வலுவுடையதாகும்.

**(வளரும்)-**




## மருத்துவக் குறிப்பு

உலகில் புற்று நோயால் மனிதர்கள் அதிக அளவில் மாண்டு வருவது அனைவரும் அறிந்ததேயாகும். இந்தப் புற்றுநோய் என்பது கிருமிகளால் ஏற்படுவது கிடையாது என்று பல அறிஞர்கள் கூறி வருகிறார்கள். இது ஒரு விஷத்தன்மையால் விளைவதே ஆகும் எனச் சிலர் கருதுகிறார்கள். ஆனால் உறுதியாக இது பற்றி யாரும் முடிவு கூறவே இல்லை. இது மனிதனுக்கு ஏற்படும் வலி, வியாதி, நோய் ஆகியவைகளில் வியாதி வகையைச் சார்ந்ததாகத் தெரிகின்றது. சில சுரப்பிகள் (ஹார்மோன்கள்) தேவைக்கு மீறி சுரந்து அதனால் இரத்தம் நஞ்சாகி இந்தக் கொடிய புற்று வியாதி வருவதாக தெரிகின்றது.

இந்தப் புற்று வியாதி வந்தபின் குணப்படுத்துவது என்பது இதுவரை இயலாத காரியமாகத் தெரிகின்றது. ஆனால் பல தெய்வீக மூலிகைகளை ஒன்றாகச் சேர்த்துக் கஷாயம் தயாரித்துக் குடித்து வந்தால் நிச்சயமாக இந்த வியாதியை குணமாக்க முடியும் என்பதை அனுபவத்தில் மட்டுமேதான் அறியமுடியும்.

### புற்றுநோய் குணமாக- முறை 1:

- வில்வ இலை- 25 கிராம்
- துளசி இலை- 25 கிராம்
- அருகம்புல் - 25 கிராம்
- வெற்றிலை - 25கிராம்
- முற்றிய வேப்பிலை-25கிராம்
- மாவிலை -25கிராம்
- அத்தி இலை -25கிராம்

இவைகளைக் கஷாய முறைப்படி வாரம் ஒருமுறை தயாரித்து வீட்டிலுள்ளோர் அனைவரும் வயதுக்குத் தக்கவாறு 10மில்லி முதல் 100 மில்லி வரை வாரத்தில் ஒருநாள் மட்டும் கஷாயம் அருந்தி வந்தால் போதுமானதாகும். நிச்சயமாக புற்றுநோய் வராமல் வாழ முடியும். நோயுற்றவர்கள் 3 தினங்களுக்கு ஒருமுறை கஷாயம் தயாரித்துக் குணமாகும் வரை தினமும் 3 வேளை அருந்த வேண்டும்.

ஆனால் இதுகாறும் உணவில் நீக்கி வந்த கசப்புச் சுவை க்குரிய காய்கறி, கீரை வகைகளான அகத்திக் கீரை, பாகற்காய், சுண்டைக்காய், கண்டங்கத்தரிக்காய், வேப்பம்பூ ஆகியவைகளில் ஏதேனும் ஒன்றினை அனுதினமும் ஒருவேளை உணவிலாவது சமைத்துண்டு வரவேண்டும்.

மேற்கண்ட முறைகளை உணவு முறையில் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் புற்றுநோய் மட்டுமன்றி எல்லா வகை உடல் நலக் குறைகளும் தோன்றா வண்ணம் வாழ முடியும். இறுதிவரை மன அமைதியும் அடைந்து மற்றவர்க்கும் நம்மால் இயன்ற அளவு உபகாரம் செய்ய முடியும்.

### முறை -2:-

வேப்பிலை, அத்தி இலை, தும்பை இலை, அருகம்புல், கீழாநெல்லி இந்த ஐந்துரக மூலிகைகளையும் சம எடை அளவில் கலந்து மாத்திரை செய் முறைப்படி மாத்திரை செய்து தினமும் காலை, பகல், இரவு- மூன்று வேளையும் உணவை முடித்த பின் வேளை ஒன்றுக்கு 3 மாத்திரைகளை வாயில் போட்டு தண்ணீர்குடித்து விழுங்கிவிட வேண்டும். அல்லது மாத்திரைகளைப் பொடியாக்கித் தண்ணீரில் கலந்தும் குடித்து விடலாம். நோய் கணமாகும் வரை ஒன்று அல்லது இரண்டு மாத காலம் சாப்பிட வேண்டும்.

இத்துடன் பூலோக தேவாமிர்தம் என்று அழைக்கப்படும் வெள்ளாட்டுப் பால் 100 மில்லியுடன், தண்ணீர் 100 மில்லி கலந்து காய்ச்சி, பனை வெல்லம் போட்டுக் கலக்கிக் குடித்து வந்தால் இன்னமும் விரைவாகக் குணமடையலாம்.

நோயாளி, வெள்ளாட்டுப்பால் அவசியத் தேவைக்கு வெள்ளாட்டு மந்தை உள்ள இடத்திற்குச் சென்று தங்கி விடுவது மிகவும் நல்லது.

### உணவுமுறை :-

அவரவர் உடம்பக்கு ஏற்ற உணவு வகைகளை அரை உப்பு கலந்து உண்ணலாம். ஒவ்வொரு வேளையும் அரைவயிறு உணவை சாப்பிட்டு வரவேண்டும்.

இரவு உணவை 7 மணிக்குள் சாப்பிட்டு முடித்தல் வேண்டும். இதற்குப் பின் விரும்பினால் ஒரு கப் பால் மட்டும் குடிக்கலாம். குடி தண்ணீர் தேவைக்கு தடையின்றி அருந்தலாம்.

### குறிப்பு:-

கொடூரமான முறையில் பாதிக்கப்பட்டவர்கள் முழு இயற்கை உணவை மேற்குறிப்பிட்டுள்ள மாத்திரையுடன் உட்கொண்டு விரைவில் குணமடையலாம்.

## தாய்மை



இறைவா இன்னொரு ஜென்மம்
எனக்கு வேண்டவே வேண்டாம்
வேறு வழி இல்லையெனில்
படைத்துவிடு
பெண்ணாக மட்டுமில்லாமல்..........
பிரசவ வலியின்போது - அவள்
இப்படித்தான் அழுது புலம்பினாள்
பிரசவமாயிற்றுதான் ஈன்றெடுத்த
பிள்ளைக் கனியமுதைப் பார்த்ததும் கூறினாள்
இறைவா எனக்கு
ஏழேழு ஜென்மங்கள் வேண்டும்
அவையனைத்திலும்
பெண்ணாகவே நான் பிறந்திடல் வேண்டும்

**தே.தவராஜா,**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம், கோண்டாவில்.**





## வண்ண வண்ண மலர்கள்

வண்ண வண்ண மலர்கள்
வகைவகையாய் மலர்ந்தது
கன்னங்கரிய விழிகளை
கொள்ளை கொள்ளும் மலர்கள்

வண்ண வண்ண மலர்களாய்
வழியில் எம்மை மயக்குமாம்
கண்ணுக்கழகு தந்திடுமாம்
பார்த்து இன்பம் பெற்றிடுவோம்

சின்னஞ்சிறிய பென்னம்பெரிய மலர்களாம்
சிறந்த நல்ல நல்ல மலர்களாம்
எந்த நிறங்கள் இருந்தாலும்
கண்ணைக் கவரும் மலர்கள்
பணம் இன்றி பெற்றுக்கொள்ளும்
வாசம் மிக்க மலர்கள்
இலகுவாய்ப் பெற்று -அதை
இறைவனுக்கு மட்டுமல்ல மனிதனும் சூடும் மலர்

வண்ண வண்ண அழகு
இயற்கை என்னும் அழகு
பார்க்க இன்பம் பொங்கிடுமே
கண்ணை கொள்ளை கொண்டிடுமே

இயற்கை அன்னை அழகில்
மகிழ்ச்சிக் கடலில் தூங்க
இயற்கை அன்னை எம்மைப் பெற்றாய்
அவளை என்றும் வாழ்த்திடுவோம்

**செல்வி. செ.சிவலோஜினி,**
**முன்பள்ளி ஆசிரியை**
**கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.**

## நடுவு நிலை

அர்த்தமுள்ள இந்துமதம் அதிகம்
சொன்ன கதைகளெல்லாம்
சித்தம் அது தெளிய வைத்து
சத்தமின்றி வாழ்வதற்கு
இந்துப் பெண்ணின் கற்பு நெறி
இமயமதை வென்றதென்று
சுற்றமது கூடி நின்று
சொன்ன கதை போலிருக்கு

வெள்ளை நிறக்காகிதத்தில் வெறும்
வார்த்தை போலன்றி முத்தெழுத்தாய்
முழு நிலவாய் வாழ்வதற்கு ஒளி கொடுக்க
கண்ணதாசன் எனும் கவியரசே
சிந்தையெல்லாம் தெளிந்ததுவே
இப்புவி வாழ்வே புரிந்ததுவே
கன்னியுண்டு காதலுண்டு–கூடவே
கற்பு நெறியுண்டு
பெண்மையுண்டு மென்மையுண்டு–கூடவே
தற்காப்புக் கலையுமுண்டு
அச்சமுண்டு நாணமுண்டு–கூடவே
அவையறியும் குணமுமுண்டு
தேவையுண்டு சேவையுண்டு–கூடவே
அறிவறியும் அறிவுமுண்டு
வீரமுண்டு விவேகமுண்டு–கூடவே
விட்டுக்கொடுக்கும் பண்புமுண்டு
பாசமுண்டு பரிவுமுண்டு–கூடவே
பண்புநெறி பலவுமுண்டு
தேடலுண்டு சேர்ப்பும் உண்டு–கூடவே
சேமிப்பு பழக்கமுண்டு
உறவுமுண்டு பிரிவுமுண்டு –கூடுவே
உழையாளும் சக்தியுண்டு
அறிவுமுண்டு ஆற்றலுமுண்டு–ஆனாலும்
மானிடா உன்வாழ்வில்
நடுவுநிலைதான் உண்டா?

**–அச்சுநகர் அச்சுதன்–**

## வேலி

பெற்றவர் போடும் வேலி
பெருவாழ்வுக்கு அத்திவாரம்
மனமுற்றவர் போடும் வேலி
மண வாழ்விற்கு இட்ட சாபம்

பெற்றவர் வேலி தாண்டல்
பெரு நெருப்பில் வீழ்வதாகும்
மணமுற்றவர் வேலி தாண்டல்
மண வாழ்வைக் குலைப்பதாகும்

வேலியைத் தாண்டினோர்கள்
வேதனைத் தீயில் வெந்தும்
சாதனை படைப்பதாக
சாடினால் சகிக்கலாமோ.........

**இ.காந்தன்**
**கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

## கிராமத்து நினைவுகள்

மாட்டு வண்டில்கள் மட்டுமே
பயணித்துப் பழக்கப்பட்ட செம்பாட்டுத் தெருக்கள்
தும்பைப் பூக்களாய் வெள்ளை மனசு கொண்ட
கிராமத்து மக்கள்
ஓலைக்குடிசைக்குள் குந்தி இருந்தபடி
ஊரைக் காத்து நிற்கும் எல்லை வைரவர்
ஓடு போட்ட ஒரே ஒரு வீடாய்
ஊரின் நடுவே ஒய்யாரமாய் எழுந்து நிற்கும்
அரச கொடையான ஆரம்பப் பள்ளி
எப்போதாவது ஒருமுறை மட்டும்
இரைந்தபடி வந்து நிற்கும்
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மருத்துவவண்டி
தாம்புத் தடிகளாய் வெள்ளை மீசைகளுடன்
கோவணம் மட்டுமே கட்டியபடி
ஏர் சுமந்து வயலுக்குச் செல்லும் எங்களூர் பெரிசுகள்
ரவிக்கை இல்லாத சேலைகளால்–தங்கள்
ரகசியங்களை மறைத்தபடி
பரகசியமாய் உலாவி வரும்
பொக்கை வாய்ப் பாட்டிகள்
கருங்காலிக் குத்திகளாய்
கறுத்துப் பெருத்த மேனிகளுடன்
களத்து மேடுகளிலும் கச்சான் பரவுகளிலும்
பம்பரமாய் வேலை செய்யும்
வாலிபச் சிங்கங்கள்
கிளைகளில் பழுத்த மாம்பழங்களாய்
கிளிமொழி பேசிடும் சித்திரங்களாய்
கிளிஞ்சல் உடைகளிலும்
கிளியோப் பட்டாக்களாய்
கிடுகு வேலிகளுக்குள்ளிருந்து
கொக்கான் விளையாடும் குமரிப் பெண்கள்
குரும்பட்டியில் ராட்டினம் கட்டி
சிக்காய் பனங்காயில் வண்டில் செய்து
மாட்டுப் பட்டிகளுடன் மல்லுக் கட்டியபடி
பாட்டுப்பாடி ஓடி விளையாடும்
மழலைச் செல்வங்கள்
ஆகமொத்தம்– இப்போதுதான்
மயக்க வந்த வாலைக் குமரியைப்போல
மனசுக்குள் நிற்கிறது– பசுமையாய் அந்த
எனது கிராமத்து நினைவுகள்

**தே.தவராஜா.**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்.**
**கோண்டாவில்.**

## கூலி

கூலிகள் ஆகினோம் நாம்
இலயம் செழிப்பதற்கு
வேலிகள் ஆகினோம் நாம்
விளை நிலம் காப்பதற்கு

கூலியை நாளும் பெற்று
குடிதனுக்கு அடிமையாகி
படிதனில் ஏறும்போது
பண்பிலா வார்த்தை பேசி

கூடிவாள் இழந்தையோடு
குலைந்துமே மனமும் நொந்து
கோரினாள் விவாகரத்து
கொடுமையின் விளிம்பில் நின்று

**இ.காந்தன்**
**கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**




(முற்றொடர்)

எங்கெல்லாம் அது உருண்டு சென்றதோ அங்கெல்லாம் அதைப் பின்தொடர்ந்து சென்றான். திறந்த வெளி ஒன்றில் அவன் ஒரு கரடியைச் சந்தித்தான். ஜரேவிச் இவான் குறி பார்த்து அம்பு எய்தி அதைக் கொல்லப் போனான். ஆனால் கரடி மனிதக் குரலில் பேசிற்று.

"ஜரேவிச் இவான், என்னைக் கொல்லாதே! யாருக்குத் தெரியும், என்றாவது ஒருநாள் உனக்கு நான் தேவைப்படலாம்" என்றது கரடி.

ஜரேவிச் இவான் கரடி மீது இரக்கங்கொண்டு அதைக் கொல்லாமல் தொடர்ந்து நடந்தான். அங்கே அவன் கண்டது என்ன?- தலைக்கு மேலே ஒரு காட்டு வாத்து பறந்து கொண்டிருந்தது. ஜரேவிச் இவான் குறிபார்த்து அம்பு எய்தி அதைக் கொல்லப் போனான். ஆனால் அது மனிதக் குரலில் பேசியது.

"ஜரேவிச் இவான், என்னைக் கொல்லாதே! யாருக்குத் தெரியும் என்றாவது ஒருநாள் உனக்கு நான் தேவைப்படலாம்" என்றது.

ஜரேவிச் இவான் வாத்தைக் கொல்லாமல் தொடர்ந்து நடந்தான். அப்பொழுது ஒரு முயல் ஓடி வந்தது.. ஜரேவிச் இவான் அதைக் கொல்வதற்கு குறிபார்த்து அம்பை எய்ய முற்பட்டான். ஆனால் முயல் இவானைப் பார்த்து மனிதக் குரலில்,

"ஜரேவிச் இவான், என்னைக் கொல்லாதே! யாருக்குத் தெரியும் என்றாவது ஒருநாள் உனக்கு நான் தேவைப்படலாம்" என்றது.

ஜரேவிச் இவான் முயலைக் கொல்லாமல் தொடர்ந்து நடந்தான். நீலக் கடல் அருகே வந்து சேர்ந்தான். அங்கே ஒரு பைக் மீன் மூச்சுத் திணறிப்போய் மணற் கரையிலே கிடப்பதைக் கண்டான்.

"ஜரேவிச் இவான், என்மீது இரக்கங் கொண்டு நீலக்கடலில் என்னைத் தூக்கிப் போடேன்!" என்று அந்த மீன் மன்றாடியது.

ஆகவே ஜரேவிச் இவான் அந்த மீனைத் தூக்கிக் கடலில் போட்டுவிட்டுக் கரையோரமாய் நடந்தான். நெடுநேரம் ஆயிற்றோ, சிறிது நேரம்தான் கழிந்ததோ யாருக்கும் தெரியாது. முடிவில் பந்து ஒரு காட்டினுள் உருண்டு ஓடிற்று காட்டில் ஒரு சிறு குடிசை கோழிக்கால்கள் மீது நின்று பம்பரம்போல் சுழன்றுகொண்டிருந்தது.

"குடிசையே, குடிசையே, முன்பு ஒரு காலத்தில் நீ நின்ற நிலையில், முன்புறம் என்னையும் பின்புறம் காட்டையும் பார்க்க நில்" என்று ஜரேவிச் இவான் கூறினான்.

குடிசை தனது முன்புறம் அவனையும் பின்புறம் காட்டையும் பார்க்கத் திரும்பி நின்றது. ஜரேவிச் இவான் அதனுள் சென்றான். சூனியக்காரி யாகா உள்ளே அடுப்படிப் பரண் முனையில் படுத்திருந்தாள். குடிசைக் கூரையிலே கோண மூக்குக் குத்தும்படி அவளுக்கு மிக்கப் பிடித்த அந்தச் சயனக் கோலத்தில் இருந்தாள்.

"இளைஞனே, நீ இங்கு வரும் காரணம் என்ன?" என்று கேட்டாள் யாகா. "யாரைத்தேடி வந்திருக்கிறாய்? இளைஞனே, உனக்கு என்ன வேண்டும் சொல்லு!"

"முதலில் என்னை நீ நீராவியில் குளிப்பாட்டி உணவும் பானமும் கொடு; கிழவியே, அதன்பின் உன் கேள்விகளைக் கேள்" என்றான் ஜரேவிச் இவான்.

அவ்வாறே யாகா அவனை நீராவியில் குளிப்பாட்டி உணவும் பானமும் தந்து படுக்க வைத்தாள். அதன்பின் ஜரேவிச் இவான் கூர்மதியும் விவேகமும் மிக்க தன் மனைவி வசிலீசாவைத் தேடியலைவதாய் அவளிடம் சொன்னான்.

"அவள் எங்கிருக்கிறாள் என்று எனக்குத் தெரியும்" என்றாள் யாகா. "சாகா வரம் பெற்ற கொஷேய் அவளைத் தன் பிடியில் இருத்தி வைத்திருக்கிறான். அவளை விடவித்துக் கொண்டு வருவது மெத்தக் கடினம். ஏனென்றால் கொஷேயை வெற்றி கொள்வது எளிய காரியமல்ல. அவனுடைய சாவு ஓர் ஊசியின் முனையில் இருக்கிறது; ஊசி ஒரு முட்டையினுள் இருக்கிறது; முட்டை ஒரு ஒரு பெட்டைத் தாராவினுள் இருக்கிறது; தாரா ஒரு முயலினுள் இருக்கிறது; முயல் ஒரு பெட்டியினுள் இருக்கிறது; பெட்டியானது சாகா வரம் பெற்ற கொஷேய் தன் கண்ணின் கருமணிபோலக் காத்து வரும் உயரமான ஓர் ஓக்மரத்தின் உச்சியில் இருக்கிறது" என்றாள்.

ஜரேவிச் இவான் அன்று இரவை யாகாவின் குடிசையில் கழித்தான். காலையில் அவள் அந்த உயரமான ஓக்மரம் எங்கிருக்கிறது என்று அவனிடம் சொன்னாள். அவன் நெடுநேரம் நடந்தானோ என்னவோ யாருக்கும் தெரியாது. ஆனால் எப்படியோ அந்த உயரமான ஓக்மரத்தை வந்தடைந்தான். நெடிது உயர்ந்த ஓக்மரம் ஆடியசைந்து சலசலத்தது. பெட்டி அதன் உச்சியில் இருந்தது. அதை எடுப்பது எளிதில் நடக்கும் காரியமல்ல.

ஆனால், விந்தையிலும் விந்தை! திடுமென அங்கே ஒரு கரடி ஓடோடி வந்தது. அது அந்த ஓக்மரத்தை வேரோடு பிடுங்கித்தள்ளிற்று. பெட்டி கீழே விழுந்து உடைந்தது. பெட்டியினுள் இருந்து ஒரு முயல் தாவிக் குதித்து ஓட்டமாய் ஓடிற்று. ஆனால் உடனே மற்றொரு முயல் அங்கே தோன்றி அதை விரட்டிச் சென்றது. முதலாவது முயலை அது பிடித்துச் சுக்குச் சக்காயப் பிய்த்து எறிந்தது. அந்த முயலினுள் இருந்து ஒரு பெட்டைத் தாரா வெளியே பறந்து வானுயர உயர்ந்து சென்றது. ஆனால் கண்ணை மூடித் திறப்பதற்குள் அந்தக் காட்டுவாத்து அதன் மீது பாய்ந்தது. அது தாக்கிய வேகத்தில் பெட்டைத் தாரா முட்டையைக் கீழே போட்டவிட்டது. முட்டை கீழே நீலக் கடலுக்குள் விழுந்தது.

இதைக் கண்ட ஜரேவிச் இவான் கண்ணீர் வடித்து வருந்தினான். கடலிலிருந்து எப்படி முட்டையைத் தேடி எடுப்பது என்று கலங்கினான். ஆனால் இருந்தாற்போலிருந்து அந்த பைக் மீன் அம்முட்டையைக் கவ்விக் கொண்டு கரைக்கு நீந்தி வந்தது. ஜரேவிச் இவான் அந்த முட்டையை வாங்கி உடைத்தான். அதனுள் இருந்த ஊசியை எடுத்து அதன் முனையை ஒடிக்க முனைந்தான். அதை அவன் பலமாய் வளைக்க வளைக்க, சாகா வரம் பெற்ற கொஷேய் மேலும் மேலும் துடியாய்த் துடித்து வளைந்து நெளிந்தான். ஆனால் அவன் என்ன துடி துடித்தும் பயனில்லை. ஜரேவிச் இவான் ஊசி முனையை உடைத்துவிட்டான். உடனே கொஷேய் உயிரிழந்து தரையிலே வீழ்ந்தான்.

ஜரேவிச் இவான் பிறகு கொஷேயின் வெள்ளைக்கல் மாளிகையினுள் சென்றான். கூர்மதியும் விவேகமும் மிக்க வசிலீசா ஓடோடி வந்து அவனுடைய மதுர இதழ்களில் முத்தமிட்டாள். ஜரேவிச் இவானும் வசிலீசாவும் அவர்களுடைய வீட்டுக்குத் திரும்பி வந்து தள்ளாத கிழவயது வரை நெடுங்காலம் இனிது வாழ்ந்தனர்.

-முற்றும்-



அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ. சங்கம் வருடந்தோறும் வழங்கி வரும் பாலர் பாடசாலை மானவர்கள், ஆசிரியர்களுக்கான சீருடைத் துணி வழங்கும் நிகழ்வின் போது சங்கத்தலைவர் சீருடை வழங்குவதையும் பொதுமுகாமையாளர் உரை யாற்றுவதையும் படங்களில் காணலாம்.



# சாதனையாளர்கள் சாவதில்லை!




கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் மூன்று 'ஏ' தரச் சித்திகளைப் பெற்றுச் சாதனை படைத்த மாணவர் களைப் பாராட்டும் விழா எமது பகுதிப் பாடசாலையொன் றில் நடைபெறும் ஆய த்தங்கள் சுறுசுறுப்பாகக் காணப்பட்டது.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், புத்திஜீவிகள் எனப் பலதரப்பட்டாவர்களும் அங்கே வந்து கொண்டிருந்தார்கள். இவர்களைக் கண்ட நானும் பொழுது போக்காக அவர்களுள் ஒருவராகக் கலந்து கொண்டேன்.

சற்று நேரத்தில் அலங்கரிக்கப்பட்ட அந்த மண்டபத்தில் பாடசாலை முதல்வர் தலைமையில் விழா ஆரம்பமாகியது. முதல்வர் தனதுரையில், இப்பாடசாலையின் வரலாற்றில் கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிற் பலர் சாதனையாளர்களாக இருப்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாதென்றும், இவர்களைப் போலவே இந்த ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் உயர்தர, சாதாரண தர, ஐந்தாம் ஆண்டு மாணவர்களும் சாதனை படைக்கக் கூடியதாக அதிக அக்கறை எடுத்து கல்வி கற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதுடன், தன்னுரையை முடித்துக் கொண்டார்.

அவரைத் தொடர்ந்து சில ஆசிரியர்களும் புத்திஜீவிகளும் உரையாற்றினார்கள். அவர்கள் யாவரும் 'ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் கல்வியே மேம்படுத்துகிறது' என்ற கருத்தொலிக்க உரையாற்றினார்கள்.

இவர்களின் பின் எமது பகுதிப் பாடசாலை களுக்கான வலயக் கல்வியதிகாரியான பெண்ணொ ருவர் தொடர்ந்தார். அழகான தோற்றத்துடன் இனிமையான குரலில் அப்பெண்ணின் உரை யிருந்ததினால் மாணவர்களும் மற்றையோரும் கற்சிலைபோல் ஆடாமல் அசையாமலிருந்து செவிமடுத்துக் கொண்டிருந்தனர்.

எந்த ஆண்டைச் சேர்ந்த மாணவர்களாயினும் கல்வி கற்றலை ஒரு சுமையாகக் கருதக்கூடாது. கரும்பைக் கடித்து சுவைக்க விரும்புவதுபோல் கல்வி கற்பதிலும் ஆவலிருக்க வேண்டும். மகிழ்வான மனநிலையுடன் தினமும் உள்வாங்கிக் கொள்ளும் கல்விச் செயற்பாடுகளே பசுமரத்தாணி போலப் பதிந்து கொள்ளும். கல்வி கற்கும் காலத்தில் தினமும் திரைப்படங்களைப் பார்த்தல், நண்பர்களுடன் வீண்பொழுது போக்குதல் போன்றவற்றையும் தவிர்த்தல் வேண்டும். இதைவிட மாணவர்களின் கல்வியையும் அவர்களின் வாழ்க்கையையுமே கேள்விக் குறியாக மாற்றும் கருவியாக கையடக்கத் தொலைபேசி விளங்குவதாகப் பல ஆய்வாளர்கள் கூறுகிறார் கள். இதில் உண்மை இல்லாமலில்லை. இதனால் மாணவர்கள் இதைப் பாவிப்பதற்கு பெற்றோர் அனுமதிப்பதை தவிர்த்தலவ் அவர்களின் கல்விக்கும் வாழ்விற்கும் சிறப்பாகவே அமையுமென நம்புகின்றேன்.

இப்படியே மாணவர்கள் கல்வியில் உயர் வடைவதற்காகப் பல கூறலாம். சுருக்கமாகச் சொன்னால் ஒவ்வொரு மாணவருக்கும் படிக்க வேண்டும் என்ற பசி ஏற்பட்டு அதைத் தீர்ப்பதற்காக தினமும் பாடசாலைக்குச் செல்லுதல் வேண்டும். அங்கு ஆசிரியர்கள் கற்பிப்பதை மனதிலிருத்தி அவர்களின் வழிகாட்டலின்படி நடந்தால் சாதனையாளராக மாறலாம். சாதனையென்பது பல வகையாகக் காணப்படுகின்றன. எவ்வித சாதனையென்றாலும் அதை எவருமே என்றுமே மறப்பதற்கில்லை. இதை அறிந்து கொள்ள உண்மையாக நடந்த ஒரு கதையை உங்களுக்குச் சொல்லுகின்றேன் என்ற வலயக் கல்வி அதிகா ரியான அந்தப் பெண் தன் நெற்றியில் அழகாக அசைந்தாடிய கூந்தல் முடிகள் சிலவற்றை ஒதுக்கி யபடியே தொடர்ந்தாள்.

தென்மராட்சியில் கச்சாய் என்ற பெயருடன் கடற்கரையோரமாக ஒரு கிராமமுள்ளது. ஒன்றே கால் நூற்றாண்டுக்கு முன் இக் கிராமத் திலுள்ள பலர் கட்டுமரங்கள் மூலம் கடல் கடந்து போய் மறுபக்கதிலுள்ள பூநகரி என்ற இடத்தில் நெற்செய்கையில் ஈடுபடுவது வழக்கமாகும்.

**சி.கூர்ச்பிள்ளை,**
**அல்லாரை வடக்கு, கொடிகாமம்.**

ஒரு தடவை ஒரு விவசாயிக்கு என்றுமே யில்லாதவாறு பெருமளவிலான நெல் விளைச்சல் காணப்படவே மனம் மகிழ்ந்த அவ்விவசாயி உரிய காலத்தில் அறுவடை செய்து பல கட்டுமரங்களில் ஏற்றி கச்சாய்க் கடற்கரைக்கு கொண்டு வந்து சேர்த்தார். கடற்கரையிலிருந்து அரைமைல் தூரத்திலேயே அவரின் வதிவிடமிருந்தது. அக் காலத்தில் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு மாட்டுவண்டில் மட்டும்தான். அந்த விவசாயியி டமிருந்த வண்டிலும் அச்சுடைந்து போனதால் வேறு தேடியலைந்தார். அறுவடை காலமாதலால் ஒன்றுமே சரிவரவில்லை.

என்ன செய்யலாம்? என்ற யோசனையுடன் நின்றபோது வானத்தில் கருமேகங்கள் ஓடிக் கொண்டிருந்தன. மேற்குத் திசையில் மின்னல் கீற்றுகளும் தோன்றி மறைந்தன. கடற்சேறு பொங்கியதால் காற்றுடன் ஒரு வித நாற்றமும் பரவியது. இடையிடையே காணப்பட்ட சூரியவொளி யில் கோழிகளும் தம் சிறகுகளை காயவிட்டன. தாழ்நிலத்திற் குடியிருந்த எறும்புகள் தம் முட்டைகளையும் வாயிற் கௌவிக்கொண்டு மேட்டு நிலத்திற்கு இடம்பெயர, தும்பிகளும் வேகமாக வட்டமிட்டுப் பறந்தன.

இதையெல்லாம் கவனித்த அந்த விவசாயி, இன்றோ நாளையோ மழை வரப்போகிறது என்பதை உணர்ந்து மிகுந்த கவலையுடன் தவித்துக்கொண்டு அங்குமிங்குமாக அலைவதைக் கண்ட இவரின் ஒரேயொரு மகனான சின்னத்தம்பி தனது மண்வெட்டியுடன் கடற்கரைக்கு விரைந்தான்.

கடற்கரையிலிருந்து வீடுவரை ஒரு வாய்க் காலை மிகக் குறுகிய நேரத்தில் வெட்டி அதனூடாகக் கட்டுமரங்களை இழுத்து வந்து நெல் மூடைகளை வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தான். இது மட்டமல்ல.. இது போன்ற பல சாதனைகளை சின்னத்தம்பி செய்ததாக பெரியோர்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு பல சாதனைகளைச் செய்ததினால் இவரை நீங்கள் புராணக் கதைகளில் வரும் இராட்சதனென்று நினைத்து விடாதீர்கள். இவரொரு பருத்த பலசாலியான மனிதன்தான். இவரின் மனோசக்தியும் உடற்பலமுமே இச்சாதனைக ளுக்குக் காரணமாக இருந்ததாக அறியக் கூடியதாகவுள்ளது.

இக்கதையிலிருந்து கல்வியின் மூலமே சாதனையாளராகலாமென்றில்லை. இயல்புக்கேற்றவாறு விடாமுயற்சியுடன் செயற் பட்டால் பல்வேறு துறைகளிலும் யாவருமே சாதனையாளராகிப் புகழடையலாம். நாமெல் லோரும் சாதனைகள் மூலம் புகழடைய வேண்டு மென்பதையே திருவள்ளுவரும்

"தோன்றிற் புகழொடு தோன்றுக— அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்று கூறியுள்ளார். இத்திருக் குறளிலிருந்து திருவள்ளுவர் காலத்திலும் சாதனை யாளர்கள் பாராட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறியக்கூடியதாக உள்ளது. இன்றைய சமூகத் திலும் சாதனையாளர்களே மதிப்புக்குரியவர்களாக இருப்பதுடன், அவர்களின் உருவம் என்றும் எல் லோர் மனங்களிலும் உலாவக் கூடியதாக வுமிருக்கிறார்கள். இதனால் மாணவர்கள் மட்டுமல்ல ஏனையோரும் சாதனையாளராகத் திகழ மயற்சிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு தன்னுரையை முடித்துக் கொண்டார் வலயக் கல்வியதிகாரியான அந்தப் பெண்மணி.

இதன் பின் சாதனை படைத்த மாணவர் களுக்கு பெறுமதியான பரிசில் வழங்கி கௌரவிக் கப்பட்ட பின் நன்றியுரையுடன் விழா முடிவடைய அங்கிருந்தோர் யாவரும் எப்படித் தாமும் சாதனையாளராக மாறலாம், என்ற எண்ணத்துட னேயே மண்டபத்தைவிட்டு வெளியேறி னார்கள். அவர்களுடன் நானும் சேர்ந்து நடக்க, எனது மனமோ எனக்கு எண்பது வயதென்பதை மறந்த நிலையில் ஏதாவதொரு சாதனை புரிய வேண்டுமென்றே துடித்துக் கொண்டிருந்தது.

## மகளிருக்கான பயிற்சிநெறி ஆரம்பம்

அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம் மகளிருக்கான சுயதொழில் பயிற்சிநெறியினை யாழ் மாவட்ட கூட்டுறவு சபை அனுசரணையுடன் நடத்தி வருகின்றது. இப்பயிற்சி நெறியில் சுமார் 40 மகளிர்கள் இணைந்துகொண்டுள்ளனர். இப்பயிற்சி யில் தையல், தலையலங்காரம், முகஅலங்காரம், சேலைகளுக்கான வர்ணம் தீட்டல், முத்துமாலை கோர்த்தல் போன்ற பல்வேறு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை இதேவகையான பயிற்சிகளை சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம் தனது மகளிர்குழு அங்கத்தவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.










இந்த இதழில் ஆசியாக்கண்டத்தில் இருக்கும் சவூதி அரேபியா நாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ளுவோம்.

## சவூதி அரேபியா

தலைநகரம் : ரியாத்
மக்கள் தொகை : 1கோடியே 60 லட்சம்
பரப்பளவு : 24 லட்சம் ச.கி.மீ
மதம் : இஸ்லாம்
மொழிகள் : அராபிக், ஆங்கிலம்
கல்வியறிவு : 62 சதவீதம்
நாணயம் : றியால்
ரெலிபோன் : 08பேருக்கு ஒன்று
தொலைக்காட்சி : 04பேருக்கு ஒன்று
வானொலி(கேட்பவர்) : 04பேருக்கு ஒருவர்
மருத்துவர்கள் : 1750பேருக்கு ஒருவர்
தாதிகள் : 700 பேருக்கு ஒருவர்
பொருளாதாரம் : பெட்ரோல் ஏற்றுமதி (உலகில் பெட்ரோல் ஏற்றுமதி செய்வதில் முதன்மையானது), விவசாயம், பேரீச்சம்பழம், கோதுமை, பார்லி, பழ வகை, தோல், கம்பளி ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.
சராசரி ஆயுட்காலம் : 64 வயது
நாட்டின் வளர்ச்சி வீதம் : 4 சதவீதம்
தனிநபர் வருமானம் : ஆண்டுக்கு 2 லட்சம் ரூபாய்
முக்கிய நகரங்கள் : மெக்கா, மதினா, ஜிட்டா, டாய்ப், ஹராத், தெஹ்ரான்
இராணுவ பலம் :- தரைப்படை 50 ஆயிரம்பேர், தேசியப் படை 25 ஆயிரம் பேர், கடற்படை 8ஆயிரம் பேர், விமானப்படை 16 ஆயிரம் பேர்.

## கண்டு பிடியுங்கள்! புதிர்




சிறார்களே! இங்கே படத்தில் கிற்றார் இசைக்கருவி, ஏணி, கத்தரிக்கோல், ஒலிப்பான், கல்-மண் வாரி (ஸ்பேட்), ரோலர் ஸ்கேட்டிங் ஆகிய பொருட்கள் இருக்கின்றன. அவற்றை 1 நிமிடத்திற்குள் கண்டு பிடித்தால் நீங்கள் கெட்டிக்காரர்.

## 'கற்பகம்' வாசகர்களுக்கான வார்த்தைச் சடுகுடு

### போட்டி-04

**அன்பான கற்பகம் வாசகர்களே! உங்கள் சிந்தனைத் திறனை தூண்டும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்கு கொண்டு பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெறுங்கள்!**




### போட்டி-03 விடைகள்

| இடமிருந்து வலம்: | | மேலிருந்து கீழ்: | | |
|---|---|---|---|---|
| 1. கற்காலம் | 7. சமர் | 1.கற்குகை | 6.டினார் | 9.ஆலை |
| 4. கைதடி | 8. பனையோலை | 2.கானா | 7.சதி | 11. சாகரம் |
| 5. சாஞ்சி | | 3.சிங்கம் | 8.யானை | |

**சரியான விடையை அனுப்பியோரில் குலுக்கல் மூலம் தெரிசெய்யப்பட்டு பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்**

- எஸ்.நிஜாந்தினி, யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
- இ.தர்மகுலசிங்கம்(J.P), யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
- எஸ்.அகல்யா, இல.65, 5ம் ஒழுங்கை, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

**இடமிருந்து வலம்:**

1. ஆண்பனைப் பதநீரை இவ்வாறு கூறுவர்.
2. இவற்றின் நிலைகளைக் கொண்டே மனித பலன்கள் கணிக்கப்படுகின்றன.
3. கண்பார்வைக்சுவர்மைக்குரிய சத்துள்ள சிறந்த தானியம்
4. தனது நாட்டின் வரைபடத்தையே தேசியக் கொடியாகக் கொண்ட நாடு.
5. இது மனித வாழ்நாளின் ஒரு பருவம் ஆகும்.
6. உடல் வளர்ச்சிக்கு வேண்டிய ஊட்டச்சத்தில் இதுவும் ஒன்று.
7. வேலைகளை இலகுபடுத்துவதற்கு பயன்படும் ஒரு பொறி.
8. கேடு அல்லது தொல்லை என்றும் சொல்லலாம்.
9. உலகம்.
10. இலங்கையின் ஏற்றுமதியில் பெரும் பங்கு வகிக்கும் கைத்தொழில்.
11. வாரம் என்பதன் தூய தமிழ்ச்சொல்.
12. நிஜமல்ல.

**மேலிருந்து கீழ்:**


1. ஒரு பிரபல்யமான தத்துவமேதை(இத்தாலி)

அனுசரணை
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ-து)
ஊழியர் நலன்புரிச் சங்கம்

# வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத்தின் கட்டட திறப்பு விழாவினதும் மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் ஆரம்ப விழாவினதும் நிகழ்வின் நிழல்கள்...



வடமாகான கூட்டுறவு ஆணையாளர் ஆ.சுப்பிரமணியசர்மா, யாழ்.அரச அதிபர் க.கணேஷ், , யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி ஆகியோர் அங்கத்தவர்களுக்கு ஓய்வூதிய காசோலைகளை வழங்குவதை படங்களில் காணலாம்.



யாழ்.மறைக்கோட்ட முதல்வர் அருட்கலாநிதி மைக்கல் சௌந்தரநாயகம் அங்கத்தவர் ஒருவருக்கு ஓய்வூதிய காசோலை வழங்குகிறார்



சமாசத் தலைவர் சி.சந்திரலிங்கம், யாழ்.பிரதேச செயலர் ஜெகூ மரியதாசன், யா.மா.கூ.சபை தலைவர் பெ.கனகசபாபதி ஆகியோர் உரையாற்றுவதைப் படங்களில் காணலாம்.

**முதலாவது கூட்டுறவு..........** (1ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கென 3கோடி ரூபா வங்கியிலிருப்பதாக பொதுமுகாமையாளர் என்னிடம் தெரிவித்துள்ளார். இந்நிதியை மேலும் அதிகரிப்பதற்குரிய வழிமுறைகளை சமாசம் கண்டறிந்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்நிதி அதிகரிக்கப்பட்டு வருமேயானால் இத்திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுததக் கூடியதாக சமாசம் தன்னை ஆக்கிக்கொள்ள முடியும்.

அரசாங்க ஊழியர்களுக்கு ஓய்வூதியம் எவ்வகையில் வழங்கப்படுகிறதோ அதே மாதிரி இந்த அங்கத்தவர்களுக்கும் தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டுமென்பதே எமது விருப்பமாகும். கூட்டுறவுத் துறையைப் பொறுத்தளவில் வடக்கு கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் ஊழியர்களுக்கு ஓய்வூதியத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இங்கு எந்த மாகாணங்களிலும் இல்லாதவாறு அங்கத்தவர்களுக்கு முதன்முறையாக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சமாசத்தின் செயற்பாடுகளுக்கு உங்கள் கோரிக்கைக்கு இணங்க கணினி இயந்திரம் ஒன்றை ஒரு மாத காலத்தில் வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்று கூறினார்.

**அங்கத்தவர்களுக்கு..........** (1ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களுடைய கடினமான தொழிலில் ஈடுபட்டுள்ள அங்கத்துவ தொழிலாளிகள் அவர்களால் தொழில் செய்யமுடியாத இறுதிக் காலத்தில் அவர்கள் தங்கள் வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு உரிய வகையில் இந்த ஓய்வூதியத் திட்டத்தை அவர்களுக்கு நடைமுறைப்படுத்த முன்வந்த சமாசம் பாராட்டுக்குரியதாகும்.

கூட்டுறவு அமைப்பின் மூலம் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதனால் சமூக மட்டத்தில விழிப்புணர்வும் முகமலர்ச்சியும் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மக்களுக்குத் தேவையானவற்றை ஆயிரம் வார்த்தைகளில் பேசுவதிலும் பார்க்க இரண்டொரு நல்ல திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருவது பாராட்டுக்குரியதாகும்.

மக்களைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்பதை இத்திட்டத்தின் செயற்பாடுகள் மூலம் காணக் கூடியதாக உள்ளது என்றார்

## வீரசிங்கம் மண்டபத்தின் புனரமைப்பிற்கு 20இலட்ச ரூபா கடனுதவி

யாழ்ப்பாணம் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தின் 4வது மாடி கூரை வேலைகளுக்கு கூட்டுறவு நிதியிலிருந்து சுமார் 20இலட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டிருப்பதாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆ.சுப்பிரமணியசர்மா தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2008ம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்டது.